5. அரசினர் மசோதாக்கள்

(அ) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) மசோதா, 1967 (சட்டப் பேரவை மசோதா எண் 2/1967).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, தமிழ்நாடு 1967-ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) மசோதாவில் (சட்டப் பேரவை மசோதா எண் 2/1967) சட்ட மேலவை செய்த திருத்தத்தை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவேண்டுமென்று மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கோருவார்கள்.

THE HON. THIRU S. MADHAVAN ; Sir, I move—

"That the following amendment made by the Legislative Council in respect of the Madras District Municipalities (Amendment) Bill, 1967 (L.A. Bill No. 2 of 1967) as passed by the Legislative Assembly, be taken into consideration.")

Clause 2.

In clause 2, in new sub-section (5-A), add the following proviso:—

"Provided that before publishing a notification under this sub-section, the State Government shall publish in the *Fort St. George Gazette*, a notice specifying the grounds on which they propose to publish such notification, fix a period of not less than four weeks for any person interested to show cause against the proposal and consider the objections, if any."

திரு. வி. கே. கோதண்டராமன் : இந்தத் திருத்த மசோதாவின் மீது ஏற்கனவே இதே மன்றத்தில் விவாதம் செய்து ஒரு முடிவுக்கு வந்திருக்கிறோம். என்றாலும் இது கவுன்சிலுக்குச் சென்றதற்குப் பிறகு அங்கே இருக்கக் கூடிய மெஜாரிடி காரணமாக,—அரசியல் நோக்கத்தோடு என்று கூடச் சொல்லலாம்—அந்த அடிப்படையில் இதை வேறு ஒன்றும் செய்யவில்லை என்று சொன்னாலும் எந்த அளவுக்குக் காலதாமதம் செய்ய வேண்டுமா—" டிலே டாக்டிக்ஸ் "— அந்த அளவுக்குக் காலதாமதம் செய்வதற்கு உரிய வழியைக் கையாண்டு இதற்கு ஒரு திருத்தத்தை உண்டாக்கி பொதுமக்களிடத்தில் அனுப்பி வைத்து அவர்களுடைய அபிப்பிராயத்தையும் கேட்டு அதற்குப் பிறகு முடிவு எடுக்க வேண்டுமென்ற பிரச்சினையில் இருக்கிறது. இது ரொம்பப் பெரிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை அல்ல—பொதுமக்களைப் பாதிக்கக் கூடிய பிரச்சினை ஒன்றும் இதிலே இல்லை. நகராட்சியைப் பொறுத்தமட்டில் உள்ள விஷயந்தான். அவர்கள் ஏற்கனவே செய்த தவறை உணருவதற்குப் பதிலாக அந்தத் தவறு செய்ததை ஊர்ஜிதப்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற அளவுக்குத்தான் இது இருக்கிறது. ஆகவே, அந்தத் திருத்தம் அவசியமே கிடையாது. அது நிராகரிக்கப்பட வேண்டுமென்று தெரிவித்து அதே நேரத்தில் ஏற்கனவே செய்திருக்கிற முடிவின் அடிப்படையில் நிறைவேற்ற வேண்டுமென்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இந்தத் திருத்தம் எப்படித் தேவையில்லை என்று முதலிலே அரசாங்கம் கருதியது என்று தெரிவிக்க ஆசைப்படுகிறேன். கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்ன கருத்து நாங்கள் ஏற்கெனவே பரிசீலித்த கருத்துத்தான். ஒரு திருத்தச் சட்டத்தின் மூலம் ஒரு ஆணை பிறப்பிக்கப்படும்போது

அந்த ஆணையால் பாதிக்கப்படுபவர்கள் யாராவது இருந்தால் அவர்களுக்கு ஒரு வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்பதுதான் ஏற்றுக் கொள்ளப்பட்ட சட்ட விதியாகும். இந்தத் திருத்தச் சட்டத்தின் மூலமாக மக்களுக்கு நன்மை செய்யப் போகிற காரணத்தால் "ஷோ காஸ் நோட்டீஸ்" கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்று இந்த அரசாங்கம் கருதியது என்று கனம் அங்கத்தினர் சொன்ன கருத்தை ஏற்றுக் கொள்ளுகிறேன். இது மேலவைக்குச் சென்ற பிறகு இதுபோன்ற வாதம் கூறப்பட்டது. நோட்டீஸ் கொடுப்பதிலே அரசாங்கத்திற்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை ; தவறு என்று கருதவில்லை, தேவையில்லை என்றுதான் கருதியது. எதிர்க்கட்சியினர் விரும்பினால் ஏற்றுக் கொள்ளத் தயார் என்று முதலிலேயே மேலவையில் சொன்னோம். அதை அவர்கள் அப்போது ஏற்றுக் கொள்ளவில்லை. அதற்குப் பின்னால் செலக்ட் கமிட்டிக்குச் சென்றது. அங்கும் அரசாங்கத் தரப்பில் இந்தக் கருத்தைச் சொன்னோம். அங்கும் ஏற்றுக்கொள்ளவில்லை. இதுபோன்ற அதிகாரமே கூடாது என்று சொன்னார்கள். மறுபடியும் மேலவைக்கு விவாதத்திற்கு வந்தபோது அவர்கள் இப்படிப்பட்ட ஒரு திருத்தம் தேவை என்று சொன்னார்கள். அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு எதிர்க்கட்சியின் கருத்துக்கு மதிப்புக் கொடுக்க வேண்டுமென்ற அளவில் இந்தத் திருத்தத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். இதை ஏற்றுக் கொண்டு விட்ட காரணத்தால் எந்தவிதமான தவறும் ஏற்பட்டுவிட முடியாது என்று கனம் அங்கத்தினர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். இந்தத் திருத்தத்தை ஏகமனதாக எல்லோரும் சேர்ந்து நிறைவேற்றுவதிலே நோக்கத்திற்கு எந்த விதமான தடங்கலோ, தடையோ ஏற்படாது என்று உறுதி கூறி, இதை நிறைவேற்றித்தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் உள்ள கேள்வி—

"இந்தத் திருத்தம் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் படவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி—

"இந்தத் திருத்தம் மசோதாவின் இரண்டாவது பிரிவுக்கு உரிய பகுதியாகக் கருதப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

THE HON. THIRU S. MADHAVAN : Sir, I move—

"That the Madras District Municipalities (Amendment) Bill, 1967 (L.A. Bill No. 2 of 1967) as amended be passed."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி—

"இந்த மசோதா திருத்தப்பட்டபடி சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, திருத்தப்பட்டபடி மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.